**சுருக்கம்**

பேருந்து நிலையம் – வாணியம்பாடி நகராட்சி – தனியாருக்கு சொந்தமான புன்செய் பட்டா நிலத்தில் புதிய கூடுதல் பேருந்து நிலையம் அமைத்தல் – நிலங்களை நேரடி பேச்சு வார்த்தை மூலம் நகராட்சி பொது நிதியிலிருந்து கிரயம் பெறுதல் – நிர்வாக ஒப்புதல் மற்றும் செலவின அனுமதி – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**அரசாணை (நிலை) எண்.185** நாள் :24.9.2008

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை**

படிக்கப்பட்டது :

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.18158/2008/டிபி2, நாள் 8.9.2008

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதத்தில் தெரிவித்துள்ள காரணங்களின் அடிப்படையில், அன்னாரின் பரிந்துரையினை ஏற்று, வேலூர் மாவட்டம் வாணியம்பாடி நகராட்சியில் புதிய கூடுதல் பேருந்து நிலையம் அமைக்க வார்டு எண்.எப்பிளாக்.28, நகரளவு எண். 52/2சி2, 52/2டி, 52/2இ மற்றும் 52/2எப்–ல் அமைந்துள்ள, தனியாருக்குச் சொந்தமான 2.69 ஏக்கர் புன்செய் பட்டா நிலத்தை ஒரு ஏக்கருக்கு ரூ.6.90 இலட்சம் என்ற விலையில் நேரடி பேச்சு வார்த்தை மூலம் நகராட்சி பொது நிதியிலிருந்து கிரயம் பெற நிர்வாக ஒப்புதல் மற்றும் செலவின அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**/ ஆளுநரின் ஆணைப்படி /**

**கே.தீனபந்து,**
**அரசு முதன்மைச் செயலர்.**

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மண்டலம்.
மாவட்ட ஆட்சியர், வேலூர் மாவட்டம்.
நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2.
நகராட்சி ஆணையர், வாணியம்பாடி.
நகல்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை– 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

பிரிவு அலுவலர் 24/9/08